**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.20/2020**
Prosecution: **PW4**

| | |
|---|---|
| Name | திரு.விஜயகுமார் |
| Father Name | திரு.விநாயகம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **12.02.2026.**

சாட்சியை மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு Crl.Mp.No.995/2025 –ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.09.2025–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

1, 3 முதல் 7 எதிரிகள் ஆஜர். 2–ம் எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் வாகன ஓட்டுநராகவும், சொந்தமாக சிற்றுண்டி கடையும் வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னுடைய சிற்றுண்டி கடை முப்பது வெட்டி கிராமத்தில் பேருந்து நிறுத்தம் அருகே உள்ளது. ஆஜர் எதிரிகள் என் ஊரை சேர்ந்தவர்கள். நானும், எதிரிகளும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1–ம் எதிரி பாஸ்கர், 2–ம் எதிரி செந்தாமரை கண்ணன் ஆகிய இருவரும் சம்பவ கால கட்டத்தில் ராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் பள்ளி அருகில் நடந்த தகராறு எதற்காக நடந்தது என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தில் தமிழக அரசின் விலையில்ல மிக்சி, கிரைண்டர் வழங்கிய சமயத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் நான் அந்த இடத்தில் அப்போது இல்லை என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த பொருட்களை வாங்க செல்லவில்லை. நான் அங்கு செல்லாததால் எந்தெந்த இடத்தில் என்ன பிரச்சனை, எதற்காக நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. யார் யார், எந்தெந்த ஆயுதத்தால் தாக்கிக் கொண்டார்கள் என்ற விவரம் நேரடியாக எனக்கு தெரியாது. அந்த இடத்தில் நான் இல்லை. பிரச்சனை முடிந்த பிறகு, அது பற்றி கேள்விப்பட்டு நான் அந்த இடத்திற்கு சென்றேன். அடிபட்ட நபர்களை எந்த வாகனத்தில் யார் எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் காவல் நிலையம் செல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து இதுநாள் வரை நான் காவல் நிலையம் செல்லவில்லை. என் வீட்டிற்கு போலிசார் வந்து என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேலூர் நீதித்துறை நடுவர் எண்.–3 நீதிமன்றத்திற்கு போலிசார் என்னையும், கோபி என்பவரையும், மற்றொரு நபரையும் ஒரே போலிசார் வாகனத்தில் அழைத்து சென்றார்கள். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் போலிசாரும், புகார்தாரர் கோபி என்பவரும் சொல்லிக் கொடுத்தபடி வாக்குமூலம் கொடுத்தேன். இந்த நீதிமன்றத்தில் நான் கொடுத்த முதல் விசாரணை சாட்சியமும் போலிசார் மற்றும் கோபி சொல்லிக்கொடுத்தவாறு சொன்னேன். இந்த நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்த போது நானும், கோபி மற்றும் சாட்சிகள் போலிசாருடன் தான் ஒரே வாகனத்தில் வந்தோம்.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.